# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 149/2024** |
| Deposition of Witness for | : | PW 8 |
| Name | : | திரு.முத்துக்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 24.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24th October 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது சேர்ந்தமரம் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு கோயம்புத்தூரில் எலக்ட்ரீசியன் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். சொந்தவேலை காரணமாக ஊருக்கு வந்திருந்தேன். அப்போது 22.08.2013ம் தேதி தளவாய்புரம் பஸ்ஸ்டாண்டில் நானும், எனது ஊரைச்சேர்ந்த சண்முகவேல் மகன் முத்துக்குமார் என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது சின்னகோவிலான்குளம் உதவி ஆய்வாளர் வந்து பஸ்ஸ்டாண்ட் முன்பு விபத்து நடந்தது என்று தெரிவித்து அது சம்பந்தமாக விசாரணை செய்வதாக கூறினார். மேற்படி உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜரில் நானும், முத்துக்குமாரும்

கையொப்பம் செய்துகொடுத்தோம். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உதவிஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நீதிமன்றத்தில் தற்போது சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அழைப்பாணையை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் அந்த அழைப்பாணையின் புகைப்படம் எனது வாட்ஸ்அப்பில் உள்ளது. மேற்படி அழைப்பாணை எனக்கு நேரில் சார்பு செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாட்ஸ்அப் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் எந்த வருடம் காவல்துறையில் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 2014 ம் வருடம் சேர்ந்தேன். இன்று சேர்ந்தமரம் காவல்நிலையத்தில் எங்குஎன்னை பணியமர்த்தியுள்ளார்கள் என்றால் இன்று எனக்கு நிலையத்தில் பணி உள்ளது. இன்று விடுமுறை எடுத்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 பட்டமுத்து எனது ஊர்க்காரர் என்றால் சரிதான். அவர் எனக்கு உறவினரா என்றால் அ.சா.1 எனது மாமா. நான் முதல் விசாரணையில் கூறியவாறு சின்னகோவிலான்குளம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், காவலராக தற்போது நான் பணிபுரிந்து வருவதால் சின்னகோவிலான்குளம் காவலர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**